ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2391/02 - 2024 ජූලි මස 01 වැනි සඳුදා - 2024.07.01

*2391/02 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

### *2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டம்*

*2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 7(1)(இ) மற்றும் பகுதி VI உடன் வாசிக்கப்படும் 105 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள்.*

**பி. நந்தலால் வீரசிங்க,**
ஆளுகைச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்.

இலங்கை மத்திய வங்கி,
கொழும்பு,
*2024, யூலை 01.*

**ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல்**

1. இவ்விதிகள் "2024 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்பும் விதிகள்" என எடுத்துக்காட்டப்படுதல் வேண்டும் என்பதுடன் பாராளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்படுகின்ற திகதியிலிருந்து இவ்விதிகள் நடைமுறைக்குவருதலாதலும் வேண்டும்.

2. 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 7(1)(இ) மற்றும் பகுதி VI இன் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 105 ஆம் பிரிவின் ஏற்பாட்டு நியதிகளில் செயற்படுகின்ற இலங்கை மத்திய வங்கி ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குள் பெற்றுக்கொள்ளுதல் தொடர்பிலும் அத்தகைய ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கை ரூபாவிற்கு மாற்றுவது தொடர்பிலும் விதிகளை இத்தால் விடுக்கின்றது.

1A - G 42147 — 24 (2024/07)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. பொருட்கள் அத்துடன்/அல்லது பணிகளின் ஒவ்வொரு ஏற்றுமதியாளரும் -

(i) இலங்கைக்கு வெளியில் ஏற்றுமதி செய்யப்படும் எல்லாப் பொருட்கள் அல்லது வழங்கப்படும் பணிகள் தொடர்பில், விடயத்திற்கேற்றவாறு, கப்பலேற்றும் அல்லது பணிகளை வழங்கும் திகதியிலிருந்து நூற்றியெண்பது (180) நாட்களினுள் ஏற்றுமதிப் பெறுகைகளைக் கட்டாயமாக இலங்கையில் பெறுதல் வேண்டும் மற்றும்,

(ii) கிடைக்கப்பெறுகின்ற ஏற்றுமதிப் பெறுகைகளின் எல்லா மற்றும் ஒவ்வொரு கிடைப்பனவின்/கிடைப்பனவுகளின் மீதும், பொருட்கள் அத்துடன்/அல்லது பணிகளின் ஒவ்வொரு ஏற்றுமதி தொடர்பிலும் ஒவ்வொரு ஏற்றுமதிப் பெறுகைகள் மீதுமான அனைத்து தொடர்புடைய ஆவண ரீதியான சான்றினையும் இலங்கையில் அத்தகைய பெறுகைகளைப் பெறுகின்ற உரிய உரிமம்பெற்ற வர்த்தக வங்கிக்குத் தாமதமின்றி உடனடியாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. மேலே 3 ஆம் விதியின் நியதிகளின் பிரகாரம், இலங்கையில் ஏற்றுமதிப் பெறுகைகளைப் பெறுகின்ற பொருட்களின் ஒவ்வொரு ஏற்றுமதியாளரும், கீழே குறிப்பிடப்பட்ட **அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகள்** தொடர்பில் மாத்திரம் அத்தகைய பெறுகைகளைப் பயன்படுத்தியதன் பின்னர் இலங்கையில் கிடைக்கப்பெற்ற ஏற்றுமதிப் பெறுகைகளின் எஞ்சியதை ஏற்றுமதிப் பெறுகைகளின் கிடைப்பனவுத் திகதியிலிருந்து, அப்பெறுகையின் கிடைப்பனவு மாதம் உட்பட, மூன்று கலண்டர் மாதங்கள் முடிவடைந்ததன் பின்னரான மாதத்தின் பத்தாவது (10 ஆவது) நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ இலங்கை ரூபாவாக கட்டாயமாக மாற்றுதல் வேண்டும்.

(i) ஏற்றுமதி வியாபாரத்துடன் தொடர்புபட்ட நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான கொடுப்பனவுகள்;

(ii) அத்தகைய வெளிநாட்டு நாணயக் கடன் மற்றும் வசதி, 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் அல்லது திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகள், கட்டளைகள் மற்றும் பணிப்புரைகளின் நியதிகளின் பிரகாரம் அனுமதிக்கப்பட்ட கடன்பெறுகையொன்றாக இருக்கின்றவிடத்து, ஏற்றுமதியாளர்களினால் பெறப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களினதும் வசதிகளினதும் படுகடன் தீர்ப்பனவுச் செலவுகள் அத்துடன் மீள்கொடுப்பனவு;

(iii) 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதிக்கப்பட்டவாறு, வதிவற்ற முதலீட்டாளர்களுக்குப் பிரகடனம் செய்யப்பட்ட பங்கிலாபங்களின் கொடுப்பனவு அத்துடன்/ அல்லது வெளிநாட்டு தேசத்தவர்களாக அல்லது இரட்டை பிரசாவுரிமையாளர்களாகவுள்ள புலம்பெயர்ந்த ஊழியர்களுக்கான சம்பளங்களின் கொடுப்பனவுகள்;

(iv) ஏற்றுமதி வியாபாரங்களுடன் தொடர்பான பயண நோக்கங்களுக்காக வெளிநாட்டு நாணயத் தாள்களின் எடுப்பனவு அல்லது நிதியங்களின் மாற்றல்;

(v) அவ்வாறு கிடைக்கபெற்ற ஏற்றுமதிப் பெறுகைகளின் பத்து சதவீதம் (10%) வரை வெளிநாட்டு நாணயத்தில் இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீடுகளைச் செய்வது தொடர்பிலான கொடுப்பனவுகள் ; அத்துடன்

(vi) குறிப்பிட்ட பொருட்கள் அத்துடன்/ அல்லது பணிகளின் ஏற்றுமதியுடன் தொடர்பான கொள்வனவிற்காக 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட மறைமுக ஏற்றுமதியாளர்களுக்கான கொடுப்பனவுகள்.

5. மேலேயுள்ள விதி 3 உடன் இணங்கியொழுகாத ஏற்றுமதியாளர்கள் ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு உட்பட வேண்டியிருக்கலாம் என்பதுடன் இலங்கைக்குத் திருப்பியனுப்பப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகளை உடனடியாக நடைமுறைக்குவரும் விதத்தில் மாற்றுதலும் வேண்டும்.

6. மேலே 4(vi)ஆம் விதியின் நியதிகளுக்கமைவாக ஏற்றுமதிப் பெறுகைகளிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவினைப் பெறுகின்ற ஒவ்வொரு நேரடியற்ற ஏற்றுமதியாளரும், மேலே 4(i) தொடக்கம் (v) வரையான விதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பில் மாத்திரம் அதனை பயன்படுத்தியதன் பின்னர் அத்தகைய கிடைப்பனவுகளின் எஞ்சியவற்றை அத்தகைய கிடைப்பனவுத் திகதியிலிருந்து அப்பெறுகையின் கிடைப்பனவு மாதம் உட்பட, மூன்று கலண்டர் மாதங்கள் முடிவடைந்ததன் பின்னரான மாதத்தின் பத்தாவது (10வது) நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ இலங்கை ரூபாவாக கட்டாயமாக மாற்றுதல் வேண்டும்.

7. மேலே விதி 3 இல் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் இலங்கையில் ஏற்றுமதிப் பெறுகைகளின் கிடைப்பனவுகளையும் மேலே 4 மற்றும் 6 ஆம் விதிகளில் வேண்டப்பட்டவாறு அத்தகைய பெறுகைகளின் மாற்றலையும் அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் கண்டிப்பாகவும் கட்டாயமாகவும் கண்காணிப்பதற்கு வேண்டப்படுதல் வேண்டும் என்பதுடன் அது தொடர்பிலான அல்லது அதனுடன் இணைந்த எல்லா அவசியமான ஆவண ரீதியான சான்றினையும் எல்லா நேரங்களிலும் பேணுதலும் வேண்டும்.

8. இலங்கை மத்திய வங்கியின் ஏற்றுமதிப் பெறுகைகள் கண்காணிப்பு முறைமையினை அணுகுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள உரிமம்பெற்ற வங்கிகளும் ஏற்றுமதியாளர்களும் தேவையான தகவல்களை எல்லா நேரங்களிலும் ஏற்றுமதிக் கண்காணிப்பு முறைமைக்கு பணிப்பாளர், வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியினால் தேவைப்படுத்துகின்றவாறு சமர்ப்பிப்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

9. அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் ஏற்றுமதியாளர்கள்/ மறைமுக ஏற்றுமதியாளர்களும் அறிக்கைகள் அத்துடன்/ அல்லது கூற்றுக்களை கேட்டுக்கொள்கின்றவாறு காலத்திற்குக் காலம் இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

10. இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்கள் மேலே 9 ஆம் விதியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கைகளையும் அத்துடன்/அல்லது கூற்றுக்களையும் அத்தகைய அறிக்கைகள் அத்துடன்/ அல்லது கூற்றுக்களின் துல்லியத்தன்மையினை சமர்ப்பிப்பதற்காக பரிசோதிக்க அல்லது பரீட்சிக்க முடியும்.

11. இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணி திணைக்களப் பணிப்பாளர், இவ்விதிகளின் நியதிகளுக்கமைய பொருட்கள் அத்துடன்/அல்லது பணிகள் ஏற்றுமதி தொடர்பில் எவரேனும் ஏற்றுமதியாளர்/மறைமுக ஏற்றுமதியாளர் அல்லது உரிமம்பெற்ற வங்கி இவ்விதிகளுடன் இணங்காமை அல்லது இவ்விதிகளின் மீறுகைக்கெதிராக நடவடிக்கையினைத் தொடங்குவதற்கு உரிமையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

12. இவ்விதிகள் செயற்பாட்டுக்கு வரும் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பொருட்கள் அத்துடன்/அல்லது பணிகளின் எல்லா மற்றும் ஒவ்வொரு ஏற்றுமதி தொடர்பிலும் இவ்விதிகள் ஏற்புடையதாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பொருட்களின் கப்பலேற்றல் அல்லது பணிகள் வழங்கல் திகதியிலிருந்து நூற்றியெண்பதாவது (180வது) நாளானது இவ்விதிகள் வலுவுக்கு வந்தபின்னர் ஏதேனும் திகதியன்று வருகின்றவிடத்து, இவ்விதிகள் செயற்பாட்டுக்கு வருகின்ற திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட பொருட்கள் அத்துடன்/அல்லது பணிகள் ஏற்றுமதிக்கு ஏற்புடையதாதலும் வேண்டும்.

13. இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களப் பணிப்பாளர் இவ்விதிகளை முன்மதியுடனும் காத்திரமான விதத்திலும் நடைமுறைப்படுத்துவதற்காக காலத்திற்குக் காலம் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை விடுப்பதற்கான அதிகாரத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

14. இவ்விதிகளின் நோக்கத்திற்காக

"நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள்" என்பது 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ள அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

"ஏற்றுமதிப் பெறுகைகள்" ஏற்றுமதி உண்டியல் கொள்வனவுகளின் (உண்டியல் கழிவிடல்) பெறுகைகள், தயாரிப்பாளர்கள்/ பணி வழங்குவோரினால் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள் அத்துடன்/ அல்லது பணிகளுக்காக உள்நாட்டு முகவர்கள்/ இடையேற்பாட்டாளர்களினூடாகப் பெறப்பட்ட கொடுப்பனவுகள், இலங்கைக்கு வெளியே வதியும் ஆட்களுக்கு வழங்கப்பட்ட தொழில்சார் நிபுணத்துவப் பணிகள், தொழில் நடவடிக்கைகள், தொழில்சார் அல்லது வியாபாரப் பணிகள் உள்ளிட்ட பணிகளுக்காக இலங்கையிலுள்ள வதியும் ஆட்களினால் வெளிநாட்டுச் செலாவணியில் பெறப்பட்ட கொடுப்பனவுகள் என்பனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

"ஏற்றுமதிப் பெறுகைகள் கண்காணிப்பு முறைமை" என்பது ஏற்றுமதிப் பெறுகைகள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுவதனைக் கண்காணிக்கின்ற நோக்கத்திற்காக இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற கணனிமயப்படுத்தப்பட்ட முறைமை எனப் பொருள்படும்.

"உரிமம்பெற்ற வங்கிகள்" என்பது 1988 ஆம் ஆண்டின் (திருத்தப்பட்டவாறான) 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கீழான வர்த்தக வங்கிகளை அல்லது சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளைக் குறிக்கும்.

"பயண நோக்கங்களுக்காக நாணயத் தாள்களை எடுப்பனவு செய்தல் அல்லது நிதியங்களை மாற்றல் செய்வது" என்பது 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகளின் நியதிகளிலுள்ள அதேகருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*15.* இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இலங்கைக்கு ஏற்றுமதிப் பெறுகைகளை திரும்ப அனுப்புவது தொடர்பான விதிகளும் 2022, ஓகத்து 12 ஆந் திகதியிடப்பட்ட இலக்கம் 2292/50 கொண்ட வர்த்தமானி (அதிவிசேட) அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திரும்ப அனுப்பும் விதிகளினால் திருத்தப்பட்டவாறான 2022 ஆம் ஆண்டின் மாச்சு 11 ஆம் நாள் திகதியிடப்பட்ட இலக்கம் 2270/ 66 கொண்ட வர்த்தமானியில் (அதிவிசேட) பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலும் அதன்கீழ் மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு விடயத்திற்கும் பங்கமின்றி இத்தால் இரத்துச்செய்யப்படுகின்றது.

EOG 07-0011

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.